**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS.No. 133/2019**

| | | DEPOSITION OF WITNESS | PW.1 |
|---|---|---|---|
| NAME | தாமோதரன் | TALUK | பேர்ணாம்பட்டு |
| HUSBAND NAME | முனிரத்தினம் | RELIGION | இந்து |
| AGE | 68 | OCCUPATION | |
| VILLAGE | எருக்கம்பட்டு | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 18.08.2025.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியும். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு போட்டுள்ளேன் என்றால் என்னுடைய நிலத்தில் அடிக்கடி நுழைய முயற்சி செய்வதால் வழக்கு போட்டுள்ளேன். புஷ்பராஜ் மற்றும் சந்திரசேகருக்கு எதிராக வழக்கு போட்டுள்ளேன். தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் 103/1L . விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 96 செண்ட்.

2. மேற்படி 96 செண்ட்டும் எனது அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். 96 செண்ட்டும் எனது அனுபவத்தில் உள்ள நிலையில் எதற்காக விளம்புகை பரிகாரம் கேட்டு வழக்கு போட்டுள்ளேன் என்றால் அவர்கள் எனது நிலத்தை அபகரித்துள்ளார்கள். நான் எனது தம்பி பத்மநாபனுக்காக சாட்சியாக வந்துள்ளேன் என்றால் சரிதான். அவரை விசாரித்தால் தான் எவ்வளவு நிலம் அபகரித்துள்ளார்கள் என தெரியவரும் என்றால் அவருக்கு எதுவும் தெரியாது அவர் அமெரிக்காவில் உள்ளார்.

3. தாவா சொத்தின் செக்குபந்தி தெரியுமா என்றால் கிழக்குபக்கம் வீ.கோட்டா – கர்ப்பநத்தம் ரோடு உள்ளது, மேற்குபக்கம் பத்மநாபன், கோவிந்து கவுண்டர், ஸ்ரீராமலு, மாணிக்கம், சித்தம்மாள், மார்கண்டன் மற்றும் பலரது வீடு உள்ளது, வடக்கு பக்கம் வரதைய்ய நாயுடு சன்ஸ், சுப்பிரமணி, ஜெகதீசன் ஆகியோரது வீடு உள்ளது, தெற்குபக்கம் ரோடும், லேட்.வஜ்ஜிரவேலு மற்றும் அவரது தம்பியோட வீடு உள்ளது.

4. பிரதிவாதிகள் புஷ்பராஜ் மற்றும் சந்திரசேகர் ஆகியோர்களது வீடு நிலத்திற்கு கிழக்கு பக்கம் உள்ளது. அவர்களது வீடுகளுக்கான பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் அவர்களது மனைவி பெயரில் உள்ளது. நான் எருக்கம்பட்டு கிராமத்தில் முன்னாள் ஊராட்சி தலைவர் என்றால் சரிதான். நான் ஊராட்சிமன்ற தலைவர் என்பதால் கிராமத்தில் உள்ளவர்களது வீடுகள் பற்றி தெரியும் என்றால் ஒரு சிலது தெரியும்.

5. வீடுகள் பிரதிவாதிகளின் மனைவி பெயரில் உள்ள நிலையில் அவர்களை ஏன் தரப்பினராக போடவில்லை என்றால் பிரதிவாதிகள் தான் பிரச்சினை செய்தார்கள். ஆவணங்கள் பிரதிவாதிகளின் மனைவி பெயரில் உள்ளது தெரியவந்த பிறகு அவர்களை ஏன் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் வழக்கறிஞரை தான் கேட்க வேண்டும். தாவா தாக்கல் செய்தபோது சொத்தை அளக்க வழக்கறிஞர் ஆணையரை நியமிக்க மனு போட்டேன் என்றால் சரிதான்.

6. அந்த மனு பெயரில் 14.02.2021 அன்று நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை அளந்தாரா என்றால் அளந்தார், அளந்தது சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அளந்தபோது எங்களுடைய 96 செண்ட் நிலத்தையும் பிரதிவாதிகளின் வீடுள்ள 102/10, 102/11 ஆகியவற்றையும் அளந்தார்கள் என்றால் அவர்களுடைய வீட்டை அளக்கவில்லை, அவர் தோராயமாக தான் அளந்தார்.

7. நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையில் மூன்று சர்வே எண்ணையும் அளந்ததாக சொல்லியுள்ளார் என்றாலும் நான் வழக்கிற்காக அளக்கவில்லை என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையில் மனுதாரரின் மனு சொத்திற்கும் எதிர்மனுதாரரின் சொத்திற்கும் எந்தவிதமான ஆக்கிரமிப்பும் ஏதுமில்லை என சொல்லியுள்ளார் என்றால் சரியாக அளக்காமல் சொல்லியுள்ளார்.

8. நீதிமன்ற ஆணையர் சரியாக சொத்தை அளக்கவில்லை என தெரிந்தபிறகு ஆட்சேபனை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். என்ன பரிகாரம் கேட்டு ஆட்சேபனை சொல்கிறேன் என்றால் மீண்டும் அளக்க சொல்லி கேட்டேன். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை அளவீடு செய்தபோது இருந்த நிலையிலேயே தாவா சொத்து தற்போது இல்லாமல் மாறுபட்டுள்ளது என்றால் சரிதான்.

9. எனது சொத்தை சுற்றி காம்பவுண்ட் கட்டி பாதுகாப்பாக உள்ளது என்றால் தகராறு நடந்த இடத்தில் அப்படியே தான் உள்ளது. எதற்காக சுற்றுசுவர் எடுத்தோம் என்றால் தகராறு நடந்த இடத்தில் எடுக்கவில்லை மற்ற இடத்தில் எடுத்துள்ளோம். வழக்கு நிலுவையில் உள்ளபோது எப்படி நான் சுற்றுசுவர் எடுத்தேன் என்றால் வழக்கு இல்லாத இடத்தில் தான் சுவர் எடுத்தேன்.

10. நான் 1ஆம் பிரதிவாதி சந்திரசேகர் என்பவரை வேலூர் காந்தி நினைவு சின்னம் அருகே அவரை திட்டியதாக வேலூர் SC. ST சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான், ஆட்சியர் அலுவலகத்தில் தள்ளுபடி செய்து விட்டார்கள். மேற்படி வழக்கை வாபஸ் வாங்க சொல்லி

ஊர் பெரியோர்கள் உடன் 1ஆம் பிரதிவாதியிடம் கேட்டேனா என்றால் இல்லை.

11. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் நான் 1ஆம்பிரதிவாதியிடம் கேட்டு அவர் வாபஸ் வாங்க மறுத்ததால் அவர் மீது இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, இந்த வழக்கை 2019–ல் போட்டேன் அந்த வழக்கு தற்போது போடப்பட்டது. இந்த வழக்கை சரியான தரப்பினருக்கு எதிராக தாக்கல் செய்யாததால் வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

12. தாவா சொத்தானது எங்களது அனுபவத்தில் உள்ளது என்றாலும் பிரதிவாதிகள் இடத்தை அபகரிக்க வேண்டியும், 1ஆம் பிரதிவாதி அவர் போட்ட வழக்கை வாபஸ் பெறாததாலும் அவர்களுக்கு எதிராக பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, 1ஆம் பிரதிவாதி தான் பழிவாங்க வேண்டி 2021ஆம் வருடம் அந்த வழக்கை போட்டார். பிரதிவாதிகளின் மனைவிகள் ராணி மற்றும் நாகமணி ஆகியோர் எனக்கு எதிராக அசல் வழக்கு எண்.171/2021 என்ற வழக்கை தாக்கல் செய்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் இதுவரை எனக்கு நோட்டீஸ் வரவில்லை.

13. அந்த வழக்கில் வக்கீல் வைத்துள்ளேனா என்றால் போன வாய்தாவில் தான் தெரியவந்தது வக்கீல் வைக்க வேண்டும். அந்த வழக்கில் நாங்கள் பிரதிவாதிகளின் வீடுகளை இடிக்க முயல்வதாகவும் அதனால் இடைக்கால தடை உத்தரவு கேட்டுள்ளார்கள் என்றால் சரிதான், நாங்கள் அதுபோல் செய்யவில்லை. அந்த வழக்கில் நாங்கள் அதுபோல் செய்யவில்லை என பதிலுரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இப்போது தான் வழக்கு பற்றி தெரியவந்தது.

14. எனது மகன் பெயர் ரஞ்சித்குமார். அவர் மூலமாக தான் ஊர் பெரியவர்கள் முன்னிலையில் பிரதிவாதிகளிடம் பேசி சமரசம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது மகன் பிரதிவாதிகளிடம் பேசினாரா என்றால் எனக்கு தெரியாது. அவரை விசாரித்தால் தெரியவரும் என்றால் சரிதான். எனது மகன் பிரதிவாதிகளிடம் பேசி சமரசம் ஏற்பட்ட பிறகு தான் நான் சுற்றுசுவரை எடுத்தேன் என்றால் சரியல்ல.

(சாட்சியும் பிரதிவாதிகளின் வழக்கறிஞரும் தாவாவானது சமரசம் பேசி தீர்க்க வாய்ப்புள்ளது என கோரியதால் வழக்கு சமரசத்திற்கு பரிந்துரைக்கப்பட்டது).

K KARTHICK ASATH

Digitally signed by K KARTHICK ASATH
Date: 2025.08.18 19:03:20 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.